Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.78/2019

**P.W**.1

| | |
|---|---|
| Name | : திருமதி.அருள்குமாரி |
| Father/Husband Name | : திரு.நந்தகோபால் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாயலூர் கிராமத்தில் குடியிருந்து ஐ.டி. கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 லஷ்மி எனது அம்மா ஆவார். பட்டியல் சாட்சி 5 அன்பழகன் எனது அப்பா ஆவார். எனக்கும், நந்தகோபால்என்பவருக்கும் 2014 ம் வருடம் திருமணம் நடந்தது. அவர் அடிக்கடிஎன்னிடம் பணம் மற்றும் நகை கேட்டு பிரச்சனை நடந்தது. அதில் சில சமயங்களில் என்னை அடிப்பார். 2017 ம் வருடம் ஒரு நாள் நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வேலை முடித்து வீட்டிற்கு வந்தபோது எனக்கும், எனது கணவருக்கும் சண்டை நடந்தது. நான் இரவு தூங்கிகாலை எழுந்து பார்த்தபோது என் கழுத்தில்இருந்த தாலி காணாமல்போய் விட்டது. வீட்டில் அவரை தவிர வேறு யாரும் இல்லை. நான் கோபித்துக்கொண்டு என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு 2 நாட்கள் கழித்து நந்தகோபால் என் அம்மா வீட்டிற்கு வந்து

என்னிடம் ஆதார் கார்டு எங்கே என்று கேட்டார். நான் தெரியாது என்று சொன்னதற்கு என்னை திட்டி அடித்தார். அப்போது எனது அப்பா அன்பழகன் வந்து கேட்டதற்கு அவருக்கும், எனது அப்பாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது சேட்டு (எ) கன்னியப்பன், சிவக்குமார், சுகன் ஆகியோர்கள் கட்டை மற்றும் கொம்புகளுடன் எனது அம்மாவீட்டு வாசலில் வந்து என்னையும், எனது அம்மாவையும் அசிங்கமாக திட்டினார்கள். அப்போது தம்பிகள் டுப்புராஜ் மற்றும் சதிஷ்குமார் வீட்டுக்குள் இருந்து வெளியே வநதார்கள். அவர்களை மேற் சொன்ன நபர்கள் அடித்துவிட்டார்கள். அதில் டுப்புராஜ்ஜிக்கு தலையில் காயம் ஏற்பட்டது. சதிஷ்குமாருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. பேசிக்கொண்டிருந்தபோது சிவக்குமார் என்பவர் பெரிய உருட்டுக்கட்டை எடுத்து எனதுஅம்மாவின் தலையில் பலமாகஅடித்துவிட்டார். எனது அம்மாவின் தலையில் வீக்கமாகவும், ரத்தமும் வந்தது. அடிப்பட்ட நபர்களை சிகிச்சைக்காக நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றேன். நாங்கள் செல்லும்போது வாகனத்தின் மீது மேற்சொன்ன நபர்கள் கல்லை எரிந்தார்கள். இது குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான்கொடுத்த புகார் ஆகும். அதை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை எனவே குறுக்கு விசாரணை நீதிமன்றத்தால் முடிக்கப்படுகிறது.**

Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.78/2019

**P.W**.2

| | |
|---|---|
| Name | : **திரு.சதிஷ்குமார்** |
| Father/Husband Name | : திரு.அன்பழகன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாயலூர் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்காஆவார். பட்டியல் சாட்சி 2 எனது அம்மா ஆவார். பட்டியல் சாட்சி டுப்புராஜ் எனது அண்ணன் ஆவார். பட்டியல் சாட்சி 5 எனது அப்பா ஆவார். கடந்த 2017 ம் ஆண்டு ஒரு நாள் காலை 7.00 முதல் 7.30 மணியளவில் எனது வீட்டில் நான், எனது அண்ணன் டுப்புராஜ், எனதுஅக்கா அருள்குமாரி ஆகியோர்கள் இருந்தபோது அக்கா கணவர் நந்தகோபால் வந்தார். அவர் சத்தமாக திட்டிக்கொண்டு இருந்தார். அப்போது எனது அக்கா வெளியே வந்து என்னவென்று கேட்டுக்கொண்டு இருந்தார். அப்போது அவர் அசிங்கமாக பேசியதால் எனது அப்பா அன்பழகன் வெளியே வந்தார். அப்பாவும், என்னவென்று கேட்டதற்கு எனது அப்பாவிற்கும் அவர் மரியாதை தரவில்லை. அப்போது உடன் வந்த

சேட்டு , சிவக்குமார், சுகன் ஆகியோர்கள் வந்து அக்காவுடன் சண்டை போட்டனர். அதை நான் தடுக்க சென்றபோது சேட்டு கட்டையால் எனது வலது கையில் அடித்துவிட்டார். அண்ணன் டுப்புராஜ் தடுக்க வந்தபோது சிவக்குமார் என்பவர் கட்டையால் தலையில் அடித்துவிட்டார். எனது அம்மா லஷ்மி சத்தம் கேட்டு வெளியே வந்து விளக்கிவிட்டபோது நந்தகோபால் எனது அம்மாதலையில் கட்டையால் அடித்துவிட்டார். எனது அம்மாவிற்கு தலையில் ரத்தம் வந்தது. நாங்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு காரில் ஏறி சென்றபோது கார் மீது கல்லை அடித்தார்கள். எனது அக்கா அருள்குமாரி இது தொடர்பாக புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை எனவே குறுக்கு விசாரணை நீதிமன்றத்தால் முடிக்கப்படுகிறது.**

Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.78/2019

**P.W**.3

| | |
|---|---|
| Name | : திரு.டுப்புராஜ் |
| Father/Husband Name | : திரு.அன்பழகன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வாயலூர் கிராமத்தில் குடியிருந்து தனியார் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்காஆவார். அ.சா.2 எனது தம்பி ஆவார். பட்டியல் சாட்சி 2 எனது அம்மா ஆவார். பட்டியல் சாட்சி 5 எனது அப்பா ஆவார். கடந்த 24.9.2017 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் நானும், எனதுஅப்பா, எனதுதம்பி, எனதுஅக்கா மற்றும் அம்மா ஆகியோர் வீட்டில் இருந்தபோது எனது அக்கா கணவர் நந்தகோபால் எனது அக்கா தாலி சரடு எடுத்தது சம்பந்தமாக பிரச்சனையாகி வீட்டிற்கு வந்திருந்தபோது என் வீட்டிற்கு வந்து எனது அக்காவை பேசிக்கொண்டிருந்தபோது அடித்துவிட்டார். தடுக்க வந்த எனது அப்பாவையும் நந்தகோபால் அடித்துவிட்டார். பிறகு அருகில் இருந்தவர்கள் தடுத்துவிட்டு நாங்கள் உள்ளே சென்றுவிட்டோம். சிறிது

நேரம் கழித்து சேட்டு, சிவக்குமார், மற்றும் சுகன் ஆகியோர்கள் நந்தகோபாலுடன் வந்து சிவக்குமார் கட்டையால் எனது அம்மாவின் தலையில் அடித்துவிட்டார். சேட்டு என்பவர் கட்டையால் எனது தம்பியின் வலது கையில் அடித்துவிட்டார். எனக்கு தலையில் சுகன் கட்டையால் பின்புறம் அடித்துவிட்டார். எனது அம்மாவிற்கு தலையில் ரத்தம் வழிந்து கொண்டு இருந்ததால் கார் வைத்துமருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். இது குறித்து அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை எனவே குறுக்கு விசாரணை நீதிமன்றத்தால் முடிக்கப்படுகிறது.**